பிரசார்பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4

**03 10 2026 SATURDAY 6.30 PM**

## மாநிலச்செய்திகள்
## தலைப்புச் செய்திகள்

**1)** பொதுமக்களின் பாதுகாப்புக்காக புதிய சட்டங்கள் கொண்டுவரப்பட்டுள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

**2)** சட்டப்பேரவை இடைத்தேர்தல் நடைபெறவுள்ள மதுராந்தகம் மற்றும் தாராபுரம் தொகுதிகளில் தேர்தல் பறக்கும் படையினர் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டுள்ளனர்.

**3)** தமிழகத்தில் போக்சோ மற்றும் போதைப்பொருள் வழக்குகளை விசாரிக்க கூடுதல் நீதிமன்றங்கள் அமைக்கப்படும் என்று மாநில அமைச்சர் திரு நிர்மல்குமார் தெரிவித்துள்ளார்.

**4)** தேர்தல் ஆணையத்திற்கு எதிராக எதிர்க்கட்சிகள் தவறான குற்றச்சாட்டுகளை தெரிவித்து வருவதாக பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் குறை கூறியுள்ளார்.

**5)** ஆசிய விளையாட்டுப் போட்டிகளின் ஆடவர் ஹாக்கிப் பிரிவில் இந்தியா தங்கப்பதக்கம் வென்றது.

-- இனி விரிவான செய்திகள்---

<<<<<<>>>>>>

பொதுமக்களின் பாதுகாப்புக்காக புதிய சட்டங்கள் கொண்டுவரப்பட்டுள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

மத்தியப்பிரதேச மாநிலம் போபாலில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், ஆங்கிலேயர் கொண்டுவந்த சட்டங்கள் அரசு நிர்வாகத்தை பாதுகாப்பதற்காகவே அமல்படுத்தப்பட்டுள்ளதாக கூறினார்.

இதில் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டு மக்களின் நலனுக்காக புதிய சட்டங்கள் கொண்டுவந்துள்ளதாக திரு அமித் ஷா தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

மதுராந்தகம் மற்றும் தாராபுரம் சட்டப்பேரவைத் தொகுதிகளில் வரும் 6-ஆம் தேதி நடைபெறவுள்ள இடைத்தேர்தலுக்கான பிரச்சாரம் நாளை மாலையுடன் நிறைவடைகிறது.

இதனையொட்டி, செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் தொகுதியில் தேர்தல் பறக்கும் படையினர் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte —சுரேகா — 30 Sec. )***

திருப்பூர் மாவட்டம் தாராபுரத்தில் பறக்கும் படைகள் மற்றும் நிலை கண்காணிப்புக்குழு மூலம், கண்காணிப்புப்பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(Voice Byte —சபரிஷ் — 41 Sec. )*

<<<<<<>>>>>>

தமிழகத்தில் போக்சோ மற்றும் போதைப்பொருள் வழக்குகளை விசாரிக்க கூடுதல் நீதிமன்றங்கள் அமைக்கப்படும் என்று மாநில அமைச்சர் திரு நிர்மல்குமார் தெரிவித்துள்ளார்.

ஈரோட்டில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், பொதுமக்களுக்கு உரிய நேரத்தில் நீதி கிடைப்பதை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக கூறினார்.

வழக்கறிஞர்களுக்கான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்துவது தொடர்பாக முதலமைச்சரிடம் பேசி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று திரு நிர்மல் குமார் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

தமிழகத்தில் போதைப்பொருள் புழக்கம் கட்டுப்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை மாநில சமூக நீதித்துறை அமைச்சர் திரு வன்னி அரசு வலியுறுத்தியுள்ளார்.

தூத்துக்குடி விமான நிலையத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதற்காக, அரசு தனியாக குழு உருவாக்கியிருப்பதாக அறிவித்துள்ளதை சுட்டிக்காட்டினார்.

மாநிலத்தில் போதைப்பொருள் பயன்பாட்டை முழுமையாக கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

217 மதுக்கடைகள் மூடப்பட்டுள்ளதாக கூறிய திரு வன்னி அரசு, பள்ளி, கல்லூரி மற்றும் கோவில்கள் அருகே மதுக்கடை இருந்தால் அவை மூடப்படும் என்று தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

சிறுபான்மையின மக்கள் கல்வி மற்றும் வேலைவாய்ப்பு பெறும் நோக்கில், 20 புதிய திட்டங்களை மாநில அரசு அறிமுகப்படுத்தியுள்ளதாக மாநில அமைச்சர் திரு ஷாஜகான் தெரிவித்துள்ளார்.

திருநெல்வேலியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதுகுறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

100 பேர் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

கடந்த நிதியாண்டில் சிறுபான்மையினர் நலத்துறைக்கு 25 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலையில், தற்போது 207 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக திரு ஷாஜகான் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

தேர்தல் ஆணையத்திற்கு எதிராக காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் தவறான குற்றச்சாட்டுகளை தெரிவித்து வருவதாக பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் குறை கூறியுள்ளார்.

நெல்லையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தேர்தலில் வெற்றிபெற்றால் தேர்தல் ஆணையம் நன்றாக செயல்பட்டதாகவும், தோல்வியடைந்தால் தேர்தல் ஆணையம் சரியாக செயல்படவில்லை என்றும் குறை கூறுவதாக தெரிவித்தார்.

தலைமை தேர்தல் ஆணையர் திரு Gyaneshkumar மற்ற இரு தேர்தல் ஆணையர்களுடன் ஆலோசித்தே முடிவுகளை எடுத்துவருவதாகவும் திரு நயினார் நாகேந்திரன் கூறினார்.

<<<<<<>>>>>>

சித்த மருத்துவத்தின்கீழ், உடற்பரிசோதனை மேற்கொள்ள மையங்கள் திறக்கப்பட்டு வருவதாக தேசிய சித்த மருத்துவ இயக்குநர் டாக்டர் செந்தில்வேல் தெரிவித்துள்ளார்.

வேலூரில், தேசிய சித்த மருத்துவ நிறுவனம் சார்பில் ஒருங்கிணைந்த சித்த மருத்துவ முகாமை தொடங்கிவைத்தபின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தேசிய ஆயுஷ் இயக்கத்தின்கீழ், சித்த மருத்துவமனைகளை அதிகரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக கூறினார்.

***(Sound Byte— செந்தில்வேல் - 37 Sec.)***

<<<<<<>>>>>>

தமிழகத்தில் திண்டுக்கல், தேனி, விருதுநகர், தென்காசி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் அடுத்த 24 மணிநேரத்தில் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

***(Sound Byte — வி ஆர் துரை - 50 Sec. )***

<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

திருப்பத்தூர் மாவட்டம் மாதனூர் ஊராட்சியில் டெங்கு காய்ச்சல் பரவல் முன்னெச்சரிக்கை மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து ஆட்சியர் திரு நல்லசிவன் இன்று ஆய்வு செய்தார்.

-------------------

தூத்துக்குடி மாநகராட்சியில் கடந்த ஒரு மாதத்தில் ஆயிரத்து 405 தெரு நாய்களுக்கு வெறி நோய் தடுப்பூசி போடப்பட்டுள்ளதாக மாநகராட்சி ஆணையர் சி. பிரியங்கா தெரிவித்துள்ளார்.

---------------

ஆந்திராவிலிருந்து, இலங்கைக்குக்கு கடத்தப்படவிருந்த 318 கிலோ போதைப்பொருளை தூத்துக்குடி மாவட்டம் குளத்தூர் அருகே காவல்துறையினர் பறிமுதல் செய்தனர்.

---------------

மயிலாடுதுறை ரயில் நிலையத்தில், திருச்சி கோட்டம் சார்பில் தூய்மை விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

-----------------

வன உயிரின வார விழாவை முன்னிட்டு, தருமபுரி மாவட்டம் பாலக்கோடு வனச்சரகம் சார்பில் 'நெகிழி இல்லா வனம்' என்ற தலைப்பில் தீவிர தூய்மைபணி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசிய விளையாட்டுப் போட்டிகளின் ஆடவர் ஹாக்கிப் பிரிவில் இந்தியா தங்கப்பதக்கம் வென்றது.

ஜப்பானில் நடைபெற்று வரும் இப்போட்டிகளின் ஹாக்கி இறுதியாட்டத்தில் இந்தியா 5-1 என்ற கோல் கணக்கில் மலேசியாவை வென்றது.

மல்யுத்தப்பிரிவில் இந்தியாவின் Aman Sehrawat தங்கப்பதக்கம் வென்றார்.

ஆடவர் 57 கிலோ எடைப்பிரிவில் அவர், இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

ஆடவர் கிரிக்கெட் இறுதியாட்டத்தில் இந்தியா 19 ரன் வித்தியாசத்தில் பாகிஸ்தானை வென்று, தங்கப்பதக்கத்தை கைப்பற்றியது.

தங்கப் பதக்கங்களை வென்ற இந்திய வீரர்களுக்கு குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பிரதமர் திரு நரேந்திர மோடி, மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன், முதலமைச்சர் திரு விஜய் உள்ளிட்டோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

**<<<<<<END>>>>>>**